2004 ஜூலை 27]

40—

தமிழ் குறும்படங்கள் தயாரிப்பு

***42118—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் குறும்படங்கள் தயாரிக்கும் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி &விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழில் குறும்படங்கள் தயாரிக்கும் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் திரைப்படங்களுக்கு மானியமும், சிறந்த படங்களுக்கு விருதுகளும் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. எம்.ஏ. ஹக்கீம்.

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறும்படங்கள் கட்டாயமாக, அவசியமாக இப்பொழுது தமிழகத்திற்குத் தேவைப்படுகின்றன. ஏனென்று சொன்னால், பெரும்படங்கள் என்று சொல்லி வரக்கூடியவை பெரும்பாலும் கலாச்சாரச் சீரழிவை, சமுதாயச் சீரழிவை இன்றைக்கு நம்முடைய நாட்டிலே உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், (குறுக்கீடு) அது ஹிந்தி படம். நான் தமிழ்ப் படத்தைப் பற்றிச் சொல்கிறேன். தமிழ்ப் படங்களிலேகூட இப்பொழுது—மூலக் கேள்வியோடவே வருகிறேன் பேரவைத் தலைவர் அவர்களே, மணி அடித்துவிடாதீர்கள். (சிரிப்பு)—கலெக்டரை விரட்டிக்கொண்டு கொலை பண்ண வருகிற மாதிரி காட்டுகிறார்கள். ஒரு படத்தில் எஸ்.பி.-யினுடைய கையை வெட்டி, துண்டாகவே விழுகிறது. அந்தப் படத்தில் அந்தக் கலெக்டரை யார் காப்பாற்றுகிறான் என்றால், இன்னொரு ரவுடி

வந்து காப்பாற்றுகிறான். இப்போதெல்லாம் சினிமா எப்படி வர ஆரம்பித்திருக்கிறதென்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு என்ன செய்ய வேண்டும்?

திரு. எம்.ஏ. ஹக்கீம்: இப்போது பெரும்படங்கள் என்ற பெயரில்கூட, சமீபத்திலேகூட ஒரு 8 வயது சின்னப் பயலை science என்ற பெயரில் 25 வயதாக மாற்றுகிற மாதிரி காட்டி, தமிழ் சினிமாவிலேயே ராத்திரியானால் 25 வயதாக ஆகிவிடுகிறான். பகல் ஆனால் 8 வயதாக ஆகிவிடுகிறான். அந்த ராத்திரி 25 வயது கோளாறால் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து அந்தக் கல்யாணம் ஆன பெண்ணை கர்ப்பமாக்கிவிடுகிறான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஹக்கீம், அது ஒரு ஆங்கிலப் படத்தினுடைய தழுவல். விட்டுவிடுங்கள்.

திரு. எம்.ஏ. ஹக்கீம்: அது தமிழ்ப் படமாக வந்தாயிற்று. அது ஒரு பெரிய சமுதாயச் சீரழிவு. சின்னப் பயல் என்கிற மாதிரி, இதைப் போய்ப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லி சின்னப் பிள்ளைகள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள். நிறைய வேலை இருக்கிறது.

திரு. எம்.ஏ. ஹக்கீம்: முக்கியமானது. சமுதாயச் சீரழிவு. ஒரு சமுதாயத்திற்கு ஆபத்து இருக்கிறது என்பதால் சொல்கிறேன். ஆகையினால் இப்போது அந்த மாதிரியாகக் காட்டும்போதெல்லாம் பெண்களுக்கும், சின்னக் குழந்தைகளுக்கும் தவறான எண்ணங்கள், சிந்தனைகள் ஏற்பட்டு நாடு கெட்டுப் போவதற்கு, சமுதாயச் சீரழிவுகள், கலாச்சாரச் சீரழிவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அவற்றுக்குத் தரக்கூடிய உதவிகளையெல்லாம் கட்டுப்படுத்தி வைத்துவிட்டு, moral lessons உள்ள குறும்படங்களை சிறு குழந்தைகள், பெண்கள், தாய்மார்கள் விரும்பிப் பார்க்கிற மாதிரி அவர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் நிறையப் படங்கள் எடுத்தால் அவை நிச்சயமாக ஒரு மாற்றத்தை உருவாக்கும். அதன் வாயிலாக சமுதாயத்திற்குச் செய்யக்கூடிய ஒரு தொண்டாகக் கூட அது இருக்கலாம் என்ற காரணத்தால் அதற்கு அதிகப்படியான உதவிகளைத் தமிழக அரசு, அம்மாவினுடைய அரசு செய்ய முன்வருமா என்பதை நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

2004 ஜூலை 27]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ் நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்' என்ற பெயரில் மாணவர்கள் தயாரிக்கும் படப்பிடிப்புக்காகவும், குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் படம் எடுப்போர் ஆகியோருக்கு தலா ஒரு பவுன் தங்கப் பதக்கம் மற்றும் 5 ஆயிரம் ரூபாய் ரொக்கம், நினைவுக் கேடயத்தையும் தமிழக அரசு வழங்கி வருகிறது. மேலும், 2001–02 ஆம் ஆண்டு மூன்றாம் ஆண்டு இயக்குதல் பிரிவு மாணவர் திரு. பிரபு ராதாகிருஷ்ணன் எடுத்த பட்டயக் குறும்படம் 'பரமபதம்' என்ற படத்திற்கு தேசிய திரைப்பட விருதுவான வெள்ளித் தாமரை பதக்கம் மற்றும் ரூபாய் 5 ஆயிரத்திற்கான காசோலை பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது. இன்று தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துத் துறைகளும் பயன்படக்கூடிய வகையிலே பல்வேறு பணிகளை மேற்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர்களுடைய கோரிக்கையும் சிந்திக்கப்படும் என்பதைக் கூறிக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

நிதியமைச்சர் பதிலுரை குறித்து திரு. மு. கருணாநிதி தெரிவித்த கருத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் இதே அவையில் சில பத்திரிகைச் செய்திகளை வைத்து அந்தச் செய்திகளுடைய நிலையை அறிவதற்கு இந்த அவையில் எழுப்பப்பட்ட நேரங்களில், பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளையெல்லாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு அவையிலே பேச முடியாது என்று அமைச்சர்களும், முதலமைச்சர் அவர்களும்கூடத் தெரிவித்திருக்கின்ற செய்திகள் இந்த அவையினுடைய குறிப்பிலே